# ஏப்ரல்- 09 - திங்கள்

## மங்கள வார்த்தை அறிவிப்பு விழா

**எனவே, இதோ வருகின்றேன்:" என்னைக் குறித்துத் திருநூல் சுருளில் எழுதப்பட்டுள்ளது: திபா. 40:7**

**முதல் வாசகம் எசாயா7 : 10 –14, 8 : 10**

ஆண்டவர் ஆகாசுக்கு மீண்டும் தம் திருவாக்கை அருளிச் சொல்லியது "உம் கடவுளாகிய ஆண்டவர் உமக்கு ஓர் அடையாளத்தை அருளுமாறு கேளும் அது கீழே பாதாளத்திலோ, மேலே வானத்திலோ தோன்றுமாறு கேட்டுக்கொள்ளும்" என்றார்.அதற்கு ஆகாசு, "நான் கேட்கமாட்டேன். ஆண்டவரைச் சோதிக்க மாட்டேன்" என்றார்.அதற்கு எசாயா "தாவீதின் குடும்பத்தாரே! நான்சொல்வதைக் கேளுங்கள் மனிதரின் பொறுமையைச் சோதித்து மனம் சலிப்படையச் செய்தது போதாதோ? என் கடவுளின் பொறுமையைக்கூட சோதிக்கப் பார்க்கிறீர்களோ?ஆதலால் ஆண்டவர்தாமே உங்களுக்கு ஓர் அடையாளத்தை அருள்வார். இதோ, கருவுற்றிருக்கும் அந்த இளம் பெண் ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பார் அக்குழந்தைக்கு அவள் "இம்மானுவேல்" என்று பெயரிடுவார். ஒன்று கூடிச் சதித்திட்டம் தீட்டுங்கள் அதுவும் விழலுக்கு இறைத்த நீராகும் கூடிப்பேசி முடிவெடுங்கள் அதுவும் பயனற்றுப் போகும். ஏனெனில் கடவுள் எங்களோடு இருக்கிறார்.

**பதில்பாடல் :** இறைவா இதோ உம் திருவுளம் நிறைவேற்ற
நான் வருகிறேன்.

**இரண்டாம் வாசகம் : எபிரேயர்10 : 4 - 10**

சகோதர சகோதரிகளே காளைகள், வெள்ளாட்டுக் கடாக்கள் இவற்றின் இரத்தம் பாவங்களைப் போக்க முடியாது. அதனால்தான் கிறிஸ்து உலகிற்கு வந்தபோது, "பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பவில்லை, ஆனால் ஓர் உடலை எனக்கு அமைத்துத் தந்தீர். எரிபலிகளும் பாவம் போக்கும் பலிகளும் உமக்கு உகந்தவையல்ல. எனவே நான் கூறியது என் கடவுளே, உமது திருவுளத்தை நிறைவேற்ற, இதோ வருகின்றேன். என்னைக் குறித்துத் திருநூல் சுருளில் எழுதப்பட்டுள்ளது" என்கிறார். திருச்சட்டப்படி செலுத்தப்பட்ட போதிலும் "நீர் பலிகளையும் காணிக்கையையும் எரிபலிகளையும் பாவம்போக்கும் பலிகளையும் விரும்பவில்லை இவை உமக்கு உகந்தவையல்ல" என்று அவர் முதலில் கூறுகிறார். பின்னர் "உமது திருவுளத்தை நிறைவேற்ற, இதோ வருகின்றேன்" என்கிறார். பின்னையதை நிலைக்கச் செய்ய முன்னையதை நீக்கிவிடுகிறார். இந்தத் திருவுளத்தால்தான் இயேசு கிறிஸ்து ஒரே ஒரு முறை தம் உடலைப் பலியாகச் செலுத்தியதின் மூலம் நாம் தூயவராக்கப்பட்டிருக்கிறோம்.

**நற்செய்தி : லூக்கா1: 26 – 38**

ஆறாம் மாதத்தில் கபிரியேல் என்னும் வானதூதரைக் கடவுள் கலிலேயாவிலுள்ள நாசரேத்து என்னும் ஊரிலிருந்த ஒரு கன்னியிடம் அனுப்பினார்.அவர் தாவீது குடும்பத்தினராகிய யோசேப்பு என்னும் பெயருடைய ஒருவருக்கு மண ஒப்பந்தமானவர். அவர் பெயர் மரியா.வானதூதர் மரியாவுக்குத் தோன்றி, "அருள்மிகப் பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்" என்றார்.இவ்வார்த்தைகளைக் கேட்டு அவர் கலங்கி, இந்த வாழ்த்து எத்தகையதோ என்று எண்ணிக் கொண்டிருந்தார்.வானதூதர் அவரைப் பார்த்து, "மரியா, அஞ்சவேண்டாம் கடவுளின் அருளைக் கண்டடைந்துள்ளீர்.இதோ, கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர் அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர்.அவர் பெரியவராயிருப்பார் உன்னத கடவுளின் மகன் எனப்படுவார். அவருடைய தந்தை தாவீதின் அரியணையை ஆண்டவராகிய கடவுள் அவருக்கு அளிப்பார்.அவர் யாக்கோபின் குடும்பத்தின் மீது என்றென்றும் ஆட்சி செலுத்துவார். அவருடைய ஆட்சிக்கு முடிவே இராது" என்றார்.அதற்கு மரியா வானதூதரிடம், "இது எப்படி நிகழும்? நான் கன்னி ஆயிற்றே!" என்றார்.வானதூதர் அவரிடம், "தூய ஆவி உம்மீது வரும். உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும். ஆதலால் உம்மிடம் பிறக்கப் போகும் குழந்தை தூயது. அக்குழந்தை இறைமகன் எனப்படும்.
உம் உறவினராகிய எலிசபெத்தும் தம் முதிர்ந்த வயதில் ஒரு மகனைக் கருத்தரித்திருக்கிறார். கருவுற இயலாதவர் என்று சொல்லப்பட்ட அவருக்கு இது ஆறாம் மாதம்.ஏனெனில், கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை" என்றார்.பின்னர் மரியா, "நான் ஆண்டவரின் அடிமை உம்சொற்படியே எனக்கு நிகழட்டும்" என்றார். அப்பொழுது வானதூதர் அவரை விட்டு அகன்றார்.

**தியானம்:** எல்லா மனிதரும் எத்தகைய பேற்றை இறுதிக்காலத்தில் பெறுவார்களோ அந்தப் பெருமையை அன்னை மரியா பெற்று விட்டார். மீட்பின் கனிகளை இங்கு தான் சுவைத்துணர்ந்தார். அதன் பயனாகவே அருளால் நிரப்பப்பட்டுள்ளார். ஆண்டவருடன் ஒன்றி வாழும் தகுதியடைகின்றார். பெண்களிளெல்லாம் சிறந்த பெண்மணியாக தெரிவுசெய்யப்படுகின்றார். அர்ச்சிக்கப்பட்ட வயிற்றின் கனியால் ஆசீர்வதிக்கப்படுகின்றார். அனைவருக்கும் ஆசீர்வாதமாக அறிவிக்கப்படுகின்றார்.(ஆதி 12:2) இவ்வாறு அனைத்து கொடைகளாலும் அலங்கரித்ததே மங்கள வார்த்தை நிகழ்வு தான். இந்த மங்கள வார்த்தை நிகழ்வைச் சிந்தித்து தியானித்து இடைவிடாது உச்சரித்துக் கொண்டேயிருப்போமாயின் நாமும் அன்னையைப்போல் மீட்பின் கனிகளைச் சுவைத்தனுபவிக்க முடியும். இப்போது இந்நிகழ்வு எவ்வளவு சிறப்புள்ளது, ஆழமானது பயனுள்ளதுஎன்று விளங்குகின்றது. நாம் "அருள் நிறைந்தவளே" என்றழைக்கும் போது நாமும் அன்னையைப்போல அருளால் நிரப்பப்படுகின்றோம். ஆண்டவருடன் ஒன்றிக்கின்றோம். மக்களிடையே பேறு பெற்றவராக்க் கருதப்படுகின்றோம். கன்னியின் கனியால் ஆசீர் பெற்று ஏராளமான கனி கொடுக்கின்றோம். எண்ணற்ற நற்செயல்கள் மண்ணில் மக்களிடையே தோன்றுகின்றது. நாம் எதை உச்சரிக்கின்றோமோ அதன் மயமாக மாறி விடுகின்றோம். ஏனெனில் எண்ணமே செயலுக்கு வித்திடுகிறது. இதை உணர்ந்து அன்னை மரியாவின் அருள் பெற்ற மக்களாக வாழ இறை அருள் வேண்டுவோம்.